ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2302/39 - 2022 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2022.10.21
**2302/39 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2014, மே மாதம் 05 ஆந் திகதிய 1861/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம்(அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 95 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் I ஆம் அட்டவணையில் காட்டப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/10/2012/LRB/223.
கா. எ. உத். இல. : WGSWD&EIP/ACQ/MH/08.
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர", இல. 1200/6,*
*ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,*
*2022, ஒற்றோபர் 05.*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ மற்றும் மஹரகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில், 526/D - ஜம்புகஸ்முல்ல, 535C - பெபிலியான கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், பெபிலியான மற்றும் கங்கொடவில கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2016.04.08 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இலக்கம் ஆ. வ. கொ. 9623 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்:

*01.* **துண்டு இல. 18 - வெலிமெட்டியே, பிட்டனியே ஓவிட்ட - விஸ்தீரணம்: 0.4004 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல 16, சுனேத்ராதேவி வீதியின் இலக்கம் 426/12/A ஐக் கொண்ட காணி மற்றும் கொ 9467 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 27; கிழக்கு : கொ 9467 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 27, 26 மற்றும் 19; தெற்கு: துண்டு இல. 19 மற்றும் உரிமை கோருவோர் கண்டுபிடிக்க முடியாத சுனேத்ராதேவி வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி ; மேற்கு: துண்டு இல. 17.

EOG 10 - 0189